## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 52/2024

நாள்: 06.04.2026

வா.சா. 2 – வேல்முருகன்

2026–ம் ஆண்டு ஏப்ரல் 06–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கிருஷ்ணவேனி, கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி எனக்கு மைத்துனர். நான் வெளிநாட்டில் 15 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. தாவா சொத்தில் வாதியின் வீடும் அதன் பின்புறம் உள்ள தோட்டத்தை சுற்றி காம்பௌண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதி குடியிருக்கும் வீட்டிற்கு கீழ்புறம் 1ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு கீழ்புறம் உள்ள குட்டை வரை அத்து உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு தென்புறம் குட்டை அத்தை ஒட்டி 1ம் பிரதிவாதி பாத்ரூம் கட்டியுள்ளார் என்றால் தெரியாது. என் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள கீழ் மேல் அளவுகளை நான் அளந்து பார்த்து சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த அளவுகள் மற்றும் வழக்கு விவரங்கள் பற்றியும் வாதி சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி குடியிருக்கும் கீழ்புறம் உள்ள இடம் வடக்கே உள்ள தெருவில் இருந்து தென்புறம் உள்ள குட்டை வரை இடையில் அத்து இல்லாமல் ஒன்றாக தான் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு தென்புறம் உள்ள இடத்தை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்று

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.